**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 274/2021**

**வா.சா.2 – கோகிலப்பிரியா**

**11–08–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இறந்து போன 1ம் வாதி எனது மாமனார். எனது கணவர் இவ்வழக்கின் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 4 ஆண்டு ஆகிறது. எனது திருமணத்திற்கு முன்பு எனது கணவர் குடும்பம் பற்றி தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வருடம் மற்றும் தேதி எனது கணவர் மற்றும் மாமனார் சொல்லி தெரியும். 2017ம் ஆண்டு முத்துலச்சுமிக்கு எனது மாமனார் சொத்தை கிரையம் கொடுத்தார். அந்த கிரையபத்திரத்தை பார்த்துள்ளேன். அதில் 40 செண்ட் பூமி கிரையம் செய்து கொடுத்துள்ளது. அந்த 40 செண்ட் பூமிக்கு எங்கள் பூமியில் 25 அடி அகலத்தில் வழித்தடம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல, அது எங்கள் பூமி.

2. 40 செண்ட் பூமிக்கு வழித்தடம் எங்கு கொடுத்துள்ளோம் என்றால் 40 செண்ட் பூமியின் கிழக்கோட்டில் உள்ள கேட்டு வரை வழித்தடம் கொடுத்துள்ளோம். மேற்படி கேட்டு என்ன காலையில் உள்ளது என்றால் 21 நெ. காலையில் உள்ளது. மேற்படி 25 அடி வழித்தடம் 21 நெ. காலையில் உள்ளது. 8 நெ. காலை எனது கணவர் வீட்டு பூர்வீக சொத்து என்றால் சரிதான். 8 நெ. கலைக்கு கிழபுறம் தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். தென்வடல் சாலையில் இருந்து 8 நெ. காலைக்கு சென்று 25 அடி அகலமுள்ள வழித்தடம் மூலம் 21 நெ. காலைக்கு சென்று அதன் தொடர்ச்சியாக முத்துலச்சுமி காலை பூமிக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான்.

3. 25 அடி அகல வழித்தடத்தில் நடந்துகொள்ளவும், வண்டிவாகனம் ஓட்டிக்கொள்ளவும் பத்திரத்தில் உரிமை கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். முத்துலச்சுமிக்கு இந்த தடத்தை தவிர அவரது பூமிக்கு செல்ல வேறு வழித்தடம் இல்லை என்றால் சரிதான். மேற்படி 40 செண்டில் 10,000 ச.அடியில் கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் குடோன் கட்டியுள்ளார். அதில் வீடும் கட்டியுள்ளார் என்றால் சரிதான். போர் போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி போருக்கும் குடோனுக்கும் வீட்டுக்கும் மேற்படி வழித்தடத்தில் தான் மின் கம்பம் வைத்து மின் இணைப்பு தர முடியும் என்பதால் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. அவர்கள் பூமிக்குள் மின் கம்பத்தை போட்டுக்கொள்ளலாம். எங்கள் பூமியில் போடுவதால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

4. தாவா தடம் எங்களுக்கும் முத்துலச்சுமிக்கும் பாத்தியப்பட்ட தடம் என்றால் சரியல்ல, எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட தடம். தாவா தடம் எனது மாமனார்க்கு பாத்தியப்பட்டதாக விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 25 அடி அகலம் உள்ள தடத்தில் ஒரு ஓரத்தில் மின் கம்பம் நட்டு 1ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பு கொடுப்பதால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஓம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.